1973 நவம்பர் 27]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இல்லை என்று பதில் சொன்னேன். மேல்விஷாரத்தில் ஏற்கெனவே இருந்த மருத்துவ மனையை அரசு கடந்த ஆண்டு எடுத்துக் கொண்டது. அதை எடுப்பதற்கு முன் ஒரு லட்சம் ரூபாய் அரசுக்கு நன்கொடை தருவதாக வாக்களித்திருந்தார்கள்; இன்னும் தரவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்கள் அந்தத் தொகையை உடனடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால், அந்த மருத்துவ மனையை விரிவுபடுத்த வாய்ப்பு ஆகும்.

தானிப்பாடி மருத்துவ மனைக்குப் புதிய கட்டடம்

* 421 வினா—திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் வட்டம், தானிப்பாடி கிராமத்தில் அரசினர் மருத்துவ மனைக்கென புதிதாகக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) தானிப்பாடி கிராமத்தில் ரூ. 4,60,000 செலவில் 16 படுக்கைகள் கொண்ட புதிய அரசினர் மருத்துவமனையும், வெளிநோயாளிப் பிரிவு, எக்ஸ்ரே பிரிவு, சமையலறை, சவப்பிரிவு முதலியவைகளையும் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. எம். எஸ். இராதாகிருஷ்ணன் : தலைவரவர்களே, அடுத்தாண்டிலாவது இந்தக் கட்டடம் நிறைவு பெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இப்போதே கட்டட வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எவ்வளவு விரைவிலே முடியுமோ அவ்வளவு விரைவிலே கட்டி முடிக்கப்படும்.

சென்னை மாநகர வளர்ச்சித் திட்டத்திற்கு நிதி

* 422 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகர வளர்ச்சித் திட்டத்திற்கென தமிழ்நாடு அரசு மத்திய அரசினரிடம் "சிறப்பு நிதி" ஏதேனும் கோரியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) அடுத்த ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் சென்னை மாநகர வளர்ச்சித் திட்டத்திற்கென ஒரு கணிசமான தொகையை ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசிடம், தமிழக அரசு கோரியுள்ளது. இக்கோரிக்கைக்கு மத்திய அரசு திட்டக்குழு கொள்கையளவில் ஒப்புதலளித்ததின்பேரில் மாநிலத் திட்டத்திற்கென ஒரு கணிசமான தொகை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, வீடுகள் இல்லாமலே பிளாட்பாரத்திலும் மரங்களிலும் பல்லாண்டு காலமாக வாழுகின்ற சென்னை நகர மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க ஏதாவது புனரமைப்புத் திட்டம் ஒன்றைத் தீட்டி செயல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இப்போது யாரும் மரங்களில் வாழ்ந்துகொண்டிருக்கவில்லை; மரங்களுக்கு அடியிலே அமர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். பிளாட்பாரத்திலேயும் பலர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பது உண்மை. அப்படிப்பட்ட இடங்களிலே வாழக்கூடியவர்கள், அவர்கள் தொழில் புரிகின்ற இடங்களுக்குப் பக்கத்திலேயே—கடைகள், மற்றும் பல சிறுதொழில்கள் நடைபெறும் இடங்களிலேயே—வாழ வேண்டுமென்று விரும்புகிறார்கள். அப்போதுதான் சிறிய வேலைகளைச் செய்து கூலி பெற வசதியாக இருக்கும் என்று கருதுகிறார்கள். நகர அமைப்புத் திட்டத்தின்கீழ் அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுத்தாலும், எப்படிப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களில் பிச்சைக்காரர்கள் தங்குவதற்குத் தயங்குகிறார்களோ அதே மாதிரி பிளாட்பாரத்தில் வசிப்பவர்களும் மறுக்கிறார்கள். ஏனென்றால் நகரமைப்புத் திட்டத்தின்படி அவர்கள் விரும்பும் இடங்களில் வீடுகளைக் கட்டிக்கொடுக்க முடியாது. புறநகர்ப் பகுதிகளில்தான் கட்டிக்கொடுக்க முடியும். கடந்த பத்தாண்டு காலத்தில் சென்னை மாநகர் பெரிய வளர்ச்சி பெற்றிருக்கிறது. மேலும் புறநகர் பகுதிகளை உருவாக்க இந்த நிதி கொடுக்கப்படுகிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, சென்னை நகர வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்கின்றபோது சென்னையைச் சுற்றி 20, 25 மைல் தூரத்திலுள்ள கிராமங்களை எல்லாம் எடுத்துக்கொள்ள

1973 நவம்பர் 27] [திரு. ஆர். பரந்தாமன்]

வேண்டுமென்ற செயற்குறிப்பு இருந்தது. இப்போது எத்தனை மைல் தூரம் எடுக்கவேண்டுமென்று அரசு முடிவு செய்திருக்கிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கிராமங்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற நிலை இல்லை. அந்த கிராமங்களிலே எப்படிப்பட்ட வளர்ச்சியை ஏற்படுத்தலாம் அல்லது எப்படிப்பட்ட வளர்ச்சி ஏற்படவிடக் கூடாது என்பதை வரையறை செய்து, சென்னையைச் சுற்றி 450 சதுர மைல் பரப்பை வளர்ச்சியடையச் செய்யத் திட்டமிடப்பட்டது. அந்த வகையில் சென்னை பெருநகரத் திட்ட வளர்ச்சிக் குழு பணியாற்றும். அப்படிப் பணியாற்றுகிறபோது சென்னைக்குப் பக்கத்திலே இருக்கிற நிலத்தின் வகை, நிலத்தில் எப்படிப்பட்ட அமைப்புகள் உருவாக்கப்படலாம் என்பது—வீடுகள் கட்டும் இட ஒதுக்கம், குடிசைகளை மாற்றி அமைக்கிற திட்டம், குடிநீர் வழங்கும் திட்டம், வடிகால் திட்டம், சமூகத் தேவைகள் ஆகியவைகளை மனத்திற்கொண்டு வளர்ச்சித் திட்டம் உருவாக்கப்படும்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, மத்திய அரசு சென்னை மாநகர வளர்ச்சித் திட்டத்திற்கு நிதி உதவி அளிக்கக்கூடிய செயற்குறிப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். டில்லிப் பட்டணத்திலே கண்ணைக்கவரும் வண்ண விளக்குகள், நீர் வீழ்ச்சிகள்—இப்படிப்பட்ட சிறப்பானத் திட்டங்களை எல்லாம் மத்திய அரசின் உதவியைக்கொண்டு நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள். இயற்கையாகக் கடற்கரையைக்கொண்ட சென்னை மாநகரில் அத்தகையத் திட்டங்கள் இல்லை. கடற்கரை வசதி இல்லாத டில்லிப் பட்டணத்திலே நிறைவேற்றுவது போன்ற திட்டங்களை மத்திய அரசின் உதவியோடு சென்னை மாநகரிலும் நிறைவேற்ற நமது அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, டில்லி நகரம் இந்திய நாட்டின் தலைநகரம். சென்னை மாநிலத் தலைநகரம். இங்கே இயற்கைக் கடற்கரை இருக்கிறது. டில்லியிலே எப்படிப்பட்ட திட்டங்களைப் போட்டாலும் இயற்கைக் கடற்கரையை உண்டாக்க முடியாது.

THIRU K. M. SUBRAMANIAM : Because the amenities and income within the city are so high, will this Government think of improving amenities in villages and also increase the per capita income in rural areas so that the inflow of population into the city from rural areas could be put an end to?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : *தலைவரவர்களே, சென்னை மாநகரத்தைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் தனித்தனியாக எல்லா வசதிகளையும் நிறைவேற்றுவது என்பது இன்னும் 10 ஆண்டு காலத்திற்குள் இயலாது. ஆனால் சென்னை மாநகரைச் சுற்றி அமைக்கப்படுகின்ற புறநகர் பகுதிகளில் சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றி, சென்னை நகரை விரும்புவது போன்று அந்த பகுதிகளையும் மக்கள் விரும்பி, அங்கே குடியேறுகின்ற வகையில், தொழிற்சாலைகள், போக்குவரத்து வசதிகள், குடியிருப்பு வசதிகள், முதலான வசதிகளையும் செய்து கொடுப்பது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்யப்படும்போது சென்னைக்குள் வரக்கூடிய மக்கள் அங்கங்கே அமைகின்ற புறநகர்ப் பகுதிகளில் தங்கிவிடுவார்கள். அந்த அடிப்படையிலே உருவாக்கப்பட்ட ஒரு புது நகர் திட்டம் 'மறைமலை நகர்' புறநகர் திட்டமாகும்.*

Site for air-port at Salem

* 423 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the State Government have handed over the site at Kamalapuram on the Salem-Bangalore route to the Union Government for the construction of an air-port at Salem ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : *(அ) & (இ) சேலத்தில் விமான நிலையம் ஒன்று அமைப்பதற்காக இடங்களைத் தெரிந்தெடுப்பது குறித்துத் தங்களது முடிவை இந்திய அரசு தெரிவிக்கவில்லை. ஆனால், சேலத்தில் விமான நிலையப் [illegible]றைக் கட்டுவதைத் தற்போது எடுத்துக்கொள்ள இயலாது எ[illegible]வர்கள் தெரிவித்துள்ளனர்.*

[முற்பகல் 9-30

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : *தலைவர் அவர்களே, அங்கே முழுமையான விமான நிலையம் உடனடியாக அமைக்காவிட்டாலும், ஏர் ஸ்ட்ரிப் அமைக்கவாவது ஏற்பாடு செய்வார்களா ?*